மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | இந்திரஜித் | நாள் | 24.04.2024 |
| தகப்பனார் பெயர் | பெருமாள் கவுண்டர் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

14) சர்வே எண்.158/1Bல் 1.57–1/2 ஏக்கர் நிலத்திற்கு கூடுதலாக 0.21–1/2 சென்ட் நிலத்தை என் தாயாரின் முன் விற்பனையாளர் அலமேலுவிற்கு அவரது தாயார் தானசெட்டில்மெண்ட் ஆவணமாகவோ அல்லது கிரயமாகவோ கொடுத்துள்ளாரா என்றால், இல்லை. அலமேலு என் தாயாருக்கு மேற்படி 0.21–1/2 சென்ட் நிலத்தை பொறுத்து சுவாதீன உறுதிமொழி பத்திரம் எழுதிகொடுத்தது மட்டும்தான் என்னிடம் உள்ளது.

15) சர்வே எண்.158/1Bல் 1.57–1/2 ஏக்கர் பொறுத்து மட்டுமே மேற்படி அலமேலுவிற்கு உரிமையுள்ள நிலையில், அதற்கு கூடுதலாக 0.21–1/2 சென்ட் நிலத்தை பொறுத்து மேற்படி அலமேலுவால் என் தாயாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக நான் சொல்லும் உறுதிமொழி பத்திரம் வழக்கிற்காக என்னால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒன்று என்றால், சரியல்ல. அதனால்தான் அ.வ.எண்.38/2020 என்ற வழக்கில் சார்பு நீதிமன்றத்தில் மேற்படி அலமேலு உயிருடன் இருந்தபோதிலும், அவரை சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல.

16) மேற்படி அ.வ.எண்.38/2020 என்ற வழக்கானது 1ம் பிரதிவாதி எங்களுக்கு எதிராக தாக்கல் செய்து, அவருக்கு செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சர்வே எண்.158/1ல் உள்ள 1.57–1/2 ஏக்கர் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், மீதமுள்ள 0.21–1/2 சென்ட் நிலத்தை எங்களிடமிருந்து சுவாதீனம் கேட்டும், அதேபோல் மேற்படி சொத்திற்குரிய மாமூல் தடவழியை தடுக்க கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், அவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். ஆனால், அந்த வழக்கு தவறானது.

17) மேற்படி சர்வே எண்.158/1ல் உள்ள 1.57–1/2 ஏக்கர் நிலத்திற்கான சக்குபந்தி என்னவென்றால், மேற்படி நிலத்தின் நான்கு புற எல்லைகளிலும் எங்களது குடும்ப நிலங்கள் தான் உள்ளது. பிரதான சாலையிலிருந்து மேற்படி 1.57–1/2 ஏக்கர் நிலத்தை

அடைவதற்கு எங்களது நிலத்தின் வழியாக 3 அடி அகல தடம் மட்டும் உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி சர்வே எண்ணில் மொத்தமுள்ள 3.15 ஏக்கர் நிலத்தில் 1.57–1/2 ஏக்கர் நிலத்தை என் தாயார் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், மீதமுள்ள 1.57–1/2 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதியின் பெயரில் செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற நிலையிலும், 1ம் பிரதிவாதி எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் வழியாகத்தான் தன் நிலத்திற்கு சென்று வருகிறார் என்றாலும், எங்கள் நிலத்தின் வழியாக 3 அடி அகல தடவழிதான் உள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

18) என் வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையிலோ அலமேலு எங்கள் குடும்பத்திற்கு 0.21–1/2 செண்ட் நிலத்தை விற்பனை செய்ததாக எவ்வித குறிப்புகளும் இல்லை என்றால், சரியல்ல. என் தாயாருக்கு விற்பனை செய்யப்பட்ட சர்வே எண்.158/1ல் உள்ள 3.15 ஏக்கர் நிலத்தில் என் தாயார் கிரயம் பெற்ற 1.57–1/2 ஏக்கர் நிலத்திற்குரிய கிரய பத்திரத்திலேயே நான்குபுற சக்குபந்தி விவரங்கள் குறிப்பிட்டு, அதில் பொதுவில் பாதி 1.57–1/2 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மேற்படி கிரய ஆவணத்தில் **"பொதுவில் பாதியில் எனக்கு பிரிந்த சொத்திற்குரிய சக்குபந்தி"** என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

19) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் **"கிழபுறம் பிரிவினையான பொதுவில் பாதி"** என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மேற்படி வாசகத்திற்கு என் தாயாரின் முன் விற்பனையாளர்களுக்கு பிரிவினையான சொத்து என்றுதான் பொருள். மேற்படி செக்குபந்தி விவரத்தில் சர்வே எண்.158/1ல் உள்ள ராமாயம்மாளின் பாகநிலத்திற்கு கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சர்வே எண்.158/1ல் உள்ள ராமாயம்மாளின் பாகத்தைதான் மேற்படி ராமாயம்மாள் மேற்படி 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால், சரிதான். ஆனால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்த சக்குபந்தி விவரங்களும், தடவழியும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், அதில் பொதுவில் பாதி என்று மட்டும்தான் குறிப்பிடபட்டுள்ளது. ஆனால், என் தாயார் பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் தெளிவாக செக்குபந்தி விவரங்கள்

குறிப்பிட்டு, அதில் ஒருபுற சக்குபந்தி விவரமாக ராமாயம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலம் காட்டப்பட்டுள்ளது.

20) 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை எதனால் நான் இவ்வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்யவில்லை என்றால், பிரதிவாதிகளின் ஆவணம் என்பதால், நான் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் சர்வே எண்.158/1 ல் 1ம் பிரதிவாதிக்கு 1.57–1/2 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டுள்ள விவரம் தெளிவாக தெரிந்துவிடும் என்பதால்தான் மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. மேற்படி அ.வ.எண்.38/2020 என்ற வழக்கு தற்போது சார்பு நீதிமன்றத்தில் தீர்ப்பிற்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றால், விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது.

21) 1ம் பிரதிவாதி மேற்படி அ.வ.எண்.38/2020 என்ற வழக்கை சார்பு நீதிமன்றத்தில் விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு மற்றும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது அவசியம் இல்லாமல் நான் இவ்வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் தடம் அமைக்க முயற்சித்ததால்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

22) இவ்வழக்கில் அ.வ.எண்.38/2020 என்ற வழக்கின் வழக்குரையை என் தரப்பில் ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.